# வெள்ளி

நவம்பர் 1972





அந்தப்பக்கம் இருப்பவர்
கருணாநிதியாயிற்றே!
8-ம் பக்கம்

* * *

அண்ணா 'அமிரு'டன்
பேசுங்கள்!
2-ம் பக்கம்

'மௌத்கல்யன்'
கதை (25-ம் பக்கம்)

30 சதம்

# 'அண்ணா'

# அமிர்தலிங்கத்துடன்

# பேசுங்கள்!



வெள்ளி வாசகர்களின் கேள்விகளுக்கு தோழர் வ. பொ. அளித்த பதில்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தன என்று பலரும் எழுதியிருக்கிறார்கள். அவருடைய பதில்கள் வெளிவந்து கொண்டிருக்கும் போதே தமிழர் கூட்டுமுன்னணித் தலைவர் ஒருவரிடமிருந்தும், பதில்கள் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித்தரும்படி அநேக வாசகர்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். அவர்களிலும்பலர் முன்னணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்தின் பதில்களை விரும்புவதாகத் தெரிவித்தார்கள்.

வாசகர்களின் விருப்பத்தை நண்பர் அமிர்தலிங்கம் அவர்களிடம் தெரிவித்தேன். அவருக்கு இப்பொழுது எவ்வளவோ பொறுப்புகள். வேலைகள். அப்படியிருந்தும் வெள்ளி வாசகர்களின் விருப்பத்தை நிறைவேற்ற இசைவு தந்துள்ளார்.

அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழகத்தின் மிகச்சிறந்த அரசியல்வாதிகளில் ஒருவர். தமிழரசுத்தந்தை செல்வநாயகத்தின் நம்பிக்கைக்குப்பாத்திரமானவர். செல்வாவின் வார்சு என்று ஒருவரைக் குறிப்பிடவேண்டுமானால் அமிர்தலிங்கத்தைத்தான் குறிப்பிடவேண்டும். பெரியவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது மட்டுமல்ல; இளைஞர்களின் இலட்சியத்தலைவராகவும் விளங்குகிறவர் அமிர். கடமையில் கருத்தும், நடைமுறையில் பண்பாடும், நாகரிகமும் உள்ளவர். தமது இளம் வயதிலிருந்தே தமிழகத்து தி. மு. க. தலைவர் 'அண்ணா'வால் கவரப்பட்டவர். இன்று ஈழத்து இளைஞர்களுக்கு ஒரு 'அண்ணா'வாக இருக்கும் தகுதி வாய்ந்தவர்.

அண்ணா 'அமி'ருக்கு இன்னொரு சிறப்பும் உண்டு, அவருடைய வீட்டில் மட்டுமல்ல, வெளியில்—அரசியல் அரங்கிலும் துணைநிற்கின்ற துணைவியாரைப் பெற்ற ஒரே ஒரு தமிழ்த்தலைவர் அமிர்தலிங்கம்தான்!

நல்லது. உங்கள் கேள்விகளை **10-11-72**க்குள் கிடைக்கக் கூடியதாக ''அண்ணா அமிர்தலிங்கம், 'வெள்ளி', 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். தேர்ந்தெடுக்கிற கேள்விகளுக்கு, அமிரின் பதில்களை அடுத்த இதழிலேயே வெளியிடுகிறேன்.

— தி. ச. வரதராசன்.

ஒரு சிந்தனை

# ‘பஞ்சமர்’

பிரபல முற்போக்கு எழுத்தாளர் கே. டானியல் எழுதிய ‘பஞ்சமர்’ என்ற நாவலின் வெளியீட்டு விழா சென்ற வாரம் நடைபெற்றது. நான் அந்த நூலை இன்னும் படிக்கவில்லை, அதனால் இப்போது அந்த நூலைப்பற்றி நான் எதுவும் எழுதவில்லை. முடிந்தால் அடுத்த இதழில் எழுதுகிறேன். ஆனால் அதை ஒட்டி எழுந்த ஒரு எண்ணத்தைக் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். தாழ்த்தப்பட்டோரின் இன்னல்களைப்பற்றியும், உயர்ந்த சாதிக்காரர்கள் என்போர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமைகளைப் பற்றியும் மட்டுமே பொதுவாக இத்தகைய கதைகளில் விவரிக்கப்படுகின்றன எழுதவேண்டியதுதான். ஆனால் தாழ்த்தப்பட்ட இனமக்களின் முன்னேற்றத்துக்கு இது மட்டும் போதுமா? தாழ்த்தப்பட்ட மக்களிடையே பல குறைகள் இருக்கின்றன. அவர்களில் பலர் தமது பிள்ளைகளின் கல்வியில் போதிய கவனம் செலுத்துவதில்லை. நாளாந்தம் உடலுழைப்பினால் நல்ல வருமானம் பெற்ற போதிலும் அதைத்திட்டமிட்டு நல்ல முறையில் செலவு செய்து, தமது குடும்பத்தை நல்ல நிலையில் வைத்துக் கொள்வதில்லை. குடிப்பழக்கம் அவர்களில் பெரும்பாலாரின் வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. இவர்களுடைய பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் எவ்வளவோ மாற வேண்டியிருக்கிறது. — இவற்றைச் சீர்திருத்துவதற்காக ஒரு பெரிய இயக்கமே தேவை. எழுத்தாளர்கள் இவற்றுக்காகவும் எழுதவேண்டும். இவர்களுடைய இந்தக் குறைபாடுகள் நீங்கிவிடுமானால் இவர்கள் ‘தாழ்த்தப்பட்ட’ நிலைமை பெரிதும் மாறிவிடும். என்னுடைய கருத்தில் கோயிலுக்குள் பிரவேசிப்பது ஒரு உரிமைப் பிரச்சினையே தவிர, அதனால் இவர்களுக்கு பெரிய முன்னேற்றம் ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை. இவர்களுடைய வாழ்க்கைத்தரம் கல்வியிலும், ‘பண்பாட்டிலும்’ பொருளாதாரத்திலும் முன்னேறவேண்டும். அப்படி முன்னேறிவிட்டால், உயர்சாதிக்காரர்களுடன் சமத்துவமாக வந்து விட இவர்களுக்கு வேறு எந்தப் போராட்டமும் அத்தியாவசியமாக இருக்காது. இப்பொழுதே அங்கொருவர் இங்கொருவர் இத்தகைய முன்னேற்றத்தினால் உயர்சாதிக்காரர்களுடன் சமமாகப் பழகுவதையும், இன்னும் உத்தியோகப் பதவியால் உயர்ந்து நிற்கும் ‘தாழ்த்தப்பட்ட’ அதிகாரிகள் சிலர், ‘உயர் சாதி’ மக்களால் ‘சேர்’ என்று அழைக்கப்படுவதையும் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம்!

உயர் சாதிக்காரர் என்பவருடன் ‘போராடுவது’ என்ற வழியினால், ஒரே நாட்டு, ஒரே இன மக்களிடையே மனக்கசப்புத்தான் மிஞ்சும். அதைவிட்டு உயர் சாதி மட்டத்துக்கு, இந்த மக்களை உயர்த்துவதற்கு இயல்பாகக்கிடைக்கக்கூடிய வழிகளில் உழைக்க முடியாதா! —வரதர்.

**கலாநிதி கைலாசபதியின் ‘மண்ணுலகத்து ஓசைகள்’**
அடுத்த இதழில்.

அறிவுக்கட்டுரை

# துன்பத்தையும் துயரத்தையும் துடைப்பது எப்படி?

க. குகதாசன் *****

மானிடர் அனைவரும் இயற்கையாக இன்பத்தையே விரும்புகின்றார்கள். துன்பத்தையும் துயரத்தையும்வெறுக்கின்றார்கள். இன்பமும், இனியகாரியங்களும் கைகூடியவுடன் உற்சாகம் பொங்கியும், மனமெங்கும் மகிழ்ச்சி நிறைந்தும், குதூகலம் கொண்டிடும் மனிதன் துன்பமும் துயரும் வந்தவுடன், உற்சாகம் மங்கி, வேதனையால்வாடி, சோகத்தினால் துயருறுகின்றான். இந்தத் துயரானது வாழ்க்கையில் வெறுப்பையும், அவநம்பிக்கையும் ஏற்படுத்தி, அதனால் உள்ளத்திலே கோபம், பொறாமை, வஞ்சகம், சூது முதலியவற்றை உண்டுபண்ண ஏதுவாகின்றது, இப் பொறாமை, வஞ்சகம், சூது அவநம்பிக்கை, கோபம் முதலியன எம் உள்ளத்தில் நிலையாகத் தங்கிவிட்டால், எம் வாழ்வில் நிகழும் எவ் இனிய நிகழ்ச்சிகளும், துன்ப நிகழ்ச்சிகளாகவே தோன்றும். ஆகவே, நாம் எமது உள்ளத்தில், அன்பு, அமைதி, சாந்தம், பொறுமை, நம்பிக்கை போன்ற ஆக்க உணர்ச்சிகளை நிரப்பிவைத்தால், வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் ஓரளவிற்குத் துடைத்தெறியலாம்!

போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து.

உலகம் எவ்வளவு விரிந்து பரந்து கிடக்கின்றதோ, அதைப்போலவே எமது ஆசைகளும் தேவைகளும் எண்ணிலடங்காமல் விரிந்தும் பரந்தும் காணப்படும். ஆனால் நாம் விரும்பும் தேவைகளெல்லாம் எமக்குக் கிடைத்துவிடுமா? வாழ்க்கையில் எமக்குக்கிடைப்பவை சில, கிடைக்காதவை பல! ஆசைக்கோர் அளவில்லை. அகிலமெல்லாவற்றையும் தன் குடைக்குக்கீழ்கட்டி ஆள்பவனும், வேறு உலகம் சென்று அங்கும் தனது ஆட்சியை நிறுவமுடியாதா என்றே அங்கலாய்ப்பான், இத்தகைய ஆசை ஈடேற முடியுமா? ஆகவே நாம் ஆசைப்படுபவை எல்லாவற்றையும் அடைந்துவிடமுடியாது. உலகில் எமது ஆசைக்கேற்ப கிடைப்பவை சில, கிடைக்காதவை பல என்ற பேருண்மையை உணர்ந்து அடையாதவற்றை எண்ணி எண்ணி ஏங்குதலைத் தவிர்த்து அடைந்தவற்றை எண்ணி எண்ணி மகிழ்தல் வேண்டும். இப் "போதும் என்ற மனப்பான்மை" எமக்கு உற்சாகத்தையும் உவகையையும்

ஊட்டி, துன்பம் வந்தபோதும் அதைத் துடைத்தெறியவல்ல அரும்பெரும் மருந்தாக, இன்ப ஊற்ருக எம் நெஞ்சில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

## துன்பத்தை விலைகொடுத்து வாங்கவேண்டாம்!

சிலர் சதாநேரமும் ஏதாவது துன்ப நிகழ்ச்சிகள் பற்றியும், துன்ப எண்ணங்கள் பற்றியுமே எண்ணி எண்ணி ஏங்குவர். இவர்கள் தமது துன்பங்களைப்பற்றியே மற்றவர்களுடன் உரையாடுவார்கள் இவர்கள் தான் துன்பத்தை விலைகொடுத்துவாங்கும் துரதிட்டசாலிகள். ''துன்பத்தை எண்ணி எண்ணி ஏங்குதல் மேன்மேலும் துன்பத்தையே கொண்டுவரும்'' என்பதை இவர்கள் அறியாதவர்கள் போலும்! துன்பகரமான நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டவுடன், இந் நிகழ்ச்சிக்குக் காரணமென்ன? இதை எப்படித் துடைப்பது? என்று எண்ணித் துணிகரமாகச் செயற்படுபவனிடம், அத்துன்பம் விடைபெற்றுவிடும், ஆனுல் அத்துன்பத்தை எண்ணி எண்ணி ஏங்கினுல் மேன்மேலும் துன்பமும் துன்ப நிகழ்ச்சிகளும் ஏற்பட்டு அவர்களது வாழ்வு துன்பத்துயர் சூழ்ந்ததாகவே காணப்படும்.

## காலையில் கண்விழித்ததுமே படுக்கையை விட்டெழுந்து காரியங்களில் ஈடுபடவும்.

கவலையைத் துடைப்பதற்கு இப்பயிற்சி மிகமிக அவசியம். கவலையுடன் காட்சிதரும் பலரை மனேதத்துவ நிபுணர்கள் பேட்டிகண்டபோது, அவர்கள் காலையில் கண்விழித்ததும்,படுக்கையை விட்டெழாமல் ஏதாவது துன்பகரமான சிந்தனையில் ஈடுபட்டிருப்பார்கள் என்று தெரியவந்தது. காலையில் கண்விழித்ததும் பல இனிய நினைவுகளும், நற்சிந்தனைகளும் மனதில் தோன்றுவது மிகமிக நன்று. அந் நற்சிந்தனைகளால் அன்று முழுவதும் நல்ல எண்ணங்களுடனும் உறுதியுடனும் உற்சாகத்துடனும் வாழமுடியும். ஆனுல் நம்மிற் பலர் அவ்வினிய நேரத்திலேயே



ஒரு காலத்தில் 'அண்ணு' வுக்கு அடுத்த பெருந்தலைவராகக் கருதப்பட்டவர் நெடுஞ்செழியன். அண்ணுவின் மறைவுக்குப் பிறகு தலைமைப்பதவியைக் கருணுநிதிக்கு இவர் விட்டுக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுதே தி. மு. க. வில் பிளவு ஏற்படுமோ என்று பலரும் அஞ்சினுர்கள். ஆனுல் கருணுநிதி மிகச்சாதுர்யமாக நிலைமையைச் சமாளித்துக் கொண்டார்.

இன்று என்ன நேரப்போகின் றதோ என்ற மனப்பயத்துடன் இல்லாததையும் பொல்லாததை யும் எண்ணி எண்ணி ஏங்கிடு வோம். இவ் ஏக்கமும் மனப்பய மும் அன்று முழுவதும் அவரு டன் கூடிக்குலாவி அவரை அன்று முழுவதும் துன்பத்திலேயே வாடச்செய்யும்.

## அலசி ஆராய்தல்

நீங்கள் ஏதாவது ஒரு கார ணத்தையிட்டுத் துயரப்பட்டால் மேன்மேலும் அதையிட்டுத் துய ரடையாது, உடனேயே, ஓர் கட தாசி எடுத்து, அக்கடதாசியில் நீங்கள் எக்காரணத்திற்காகத் துயரப்படுகின்றீர்கள் என்று எழுதவும். அதன்பின், அத்துய ரினை வெல்வதற்கு நீர் செய்யக் கூடிய முயற்சிகள் யாவை எனச் சிந்தித்து ஒவ்வொன்ருக எழுத வும். எல்லாவகையான முயற்சி களையும் எழுதியபின்னர், நீர் கவலையடையும் காரணத்தையும் அவற்றிற்கு ஏற்ற பரிகாரங்களை யும் அலசி ஆராயவும். இப்படி ஆராயும்போதுசற்றுமுன்னர் நீங் கள் எண்ணிய துயரெல்லாம், துய ரல்ல என எண்ணத் தோன்றும்.

## மனதைத் தேற்றுதல்!

மனதைத் தேற்றுதல் மூல மாகவும் கவலையை விரட்டலாம். இம்மனத்தேற்றுதலை எவ்வளவு இலகுவாக முதுபெரும் இராச தந்திரியாகிய ராஜாஜி அவர்கள் சிறைச்சாலையில் இருக்கும்போது கடைப்பிடித்தார் என்பதைத் தனது ''ஜெயில் டயரியில்'' பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''இன்று மாலையில் அறை யைப் பூட்டியபிறகு என்னையறி யாமலே ஒருவித மனச்சோர்வும் குழந்தைகளைப்பற்றிய நினைவும் என்னுடைய மனத்தில் வந்து தோன்றின. முதலில் அகற்ற முடியாததென்றே தோன்றியது. கவலையை அகற்றுவதற்காக அரு ம்பாடுபட்டுக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் எனக்குக் கீழ்கண்ட எண்ணங்கள் தோன்றி உதவி செய்தன'':

''வேலையின் நிமித்தம் அநே கர் மாதக்கணக்காக மட்டுமின்றி வருடக்கணக்காகக்கூடத் தங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்தி ருக்கவில்லையா? நீயும் கூட இதற் குமுன் குழந்தைகளை விட்டுப் பிரிந்து இருந்ததில்லையா? ஏதோ, இப்பொது சிறையில் இருப்பதாக எண்ணியே இப்படி மனச்சோர்வுக்கு இடங்கொடு த்து விட்டாய்''

''மேற்கண்ட கேள்விகளை நானே கேட்டுக்கொண்டேன். அதிலிருந்து மனச்சோர்வு நீங் கப்பெற்றேன்''


மனதைத் தேற்றுவதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் எடுத்துக்கூறுவது கடினம். இப்ப டியாக மனதைத் தேற்றினல் அக்கவலை எம்மைவிட்டு ஓடிவி டும். மாணவர் பலர் சோதனை யில் சித்தியடையாமை காரண மாகக் கவலை அடைகின்றனர். அவர்களும் ராஜாஜி போன்று மனதைத் தேற்றுதல் வேண்டும். நான் சோதனையில் சித்தியடை யாமைக்குக் காரணம் யாது? நான் கவனமாகப் படிக்கவில்லை. கவனமாகப் படித்தோர் பலர்

சித்தியடைந்துள்ளனர், என்னிலே பிழை உள்ளபோது கவலை அடைந்து என்ன பயன்? ஆகவே மறுமுறை சித்தியடைவதற்கு, இன்றிலிருந்தே முயற்சியில் ஈடுபட்டால் கவலை இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

## அஞ்சவேண்டாம்!

'கவலை' என்னும் ஆறு, 'அச்சம்' 'பயம்' என்ற மலைகளிலிருந்தே தோன்றுகின்றது என்று கூறுவார்கள். சிலர் ''நான் வாழ்நாளெல்லாம் வறுமையிலேயே வாடப்போகின்றேன்'' என்று அஞ்சுவர். சிலர் ''எனது இளமை அழகு பறிபோகிறதே'' என அஞ்சுவர். மற்றும் சிலர், மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன எண்ணுவார்களோ என எண்ணி எண்ணி ஏங்குவர். வேறுசிலர் ''எனக்கு அவனைப்போல் அந்த வருத்தம் வந்துவிட்டால்......'' என வீண் கற்பனைசெய்து அஞ்சி அஞ்சிச் சாவர். இப்படி அஞ்சி அஞ்சிச் சாவோரின் வாழ்வில் எவ் இனிய நிகழ்ச்சிகளும் கசப்பாகவே தோன்றும். ஆனால் ''அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்று எண்ணி வாழ்வோர் தம்மத்தியிலே ஏற்படும் எவ்விதக் கசப்பான நிகழ்ச்சிக்கூடாகவும், இனிமையான நிகழ்ச்சி ஒன்றைக்கண்டு அதையிட்டு, உள்ளம் மலர்ந்து உவகையுடன் காணப்படுவார்கள்.

மேற்கூறிய பயிற்சிகளை நீங்களும் கடைப்பிடித்தால் நாளடைவில் இப்பக்குவத்தை நீங்களும் அடைவதில் தடையேதும் உண்டோ? ●



'டைகர்பாம்' என்பது தலைவலிக்குப் பூசும் ஒரு தைலம். இதன் தயாரிப்பாளர் ஒரு சீனர். 'டைகர் பாம்' தலைவலி மருந்து விற்றே பெரிய கோடீஸ்வரர் ஆனவர். தமது தாய் நாடான ஹொங்ஹொங்கிலும், புகுந்த நாடான சிங்கப்பூரிலும் 'டைகர் பாம் கார்டன்' என்ற பெயரில் பெரிய அளவில் விநோதமான தோட்டங்களை அமைத்திருக்கிறார் இந்தச் சீனர். சீனப்புராணக் கதைகளை விளக்கும் அனேக சிற்பங்களையும் வேறு பல பொழுதுபோக்கு அம்சங்களையும் இந்தத் தோட்டங்களில் காணலாம். தினந்தோறும் பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்தத் தோட்டங்களுக்குச் சென்று பொழுது போக்குகிறார்கள். ஒவ்வொரு தோட்டமும் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது! 'ஹொங்ஹொங்' கிலுள்ள டைகர்பாம் கார்டனில் எம் ஜி ஆரின் உலகம் சுற்றும் வாலிபனுக்கான ஒரு காட்சி படமாக்கப் பட்டிருக்கிறது.

# தி. மு. க.

| கருணாநிதி | எம். ஜி. ஆர். |
|---|---|

தமிழகத்தில் தி. மு. க. இரண்டாகப்பிரிந்து விட்டது!

தி. மு. க. வே, முன்பு பெரியாரின் திராவிடக்கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்களின் அமைப்புத்தான்.

பிறகு தி. மு. க. விலிருந்து சம்பத் பிரிந்த போது 'தமிழ்த் தேசியக்கட்சி' தோன்றிற்று. ஆனால் அது வளர முடியவில்லை.

இப்போது தி. மு. க. விலிருந்து 'அண்ணா தி. மு. க' தோன்றியிருக்கிறது!

ஒரு பெரிய கட்சியிலிருந்து இன்னொரு கட்சி தோன்றுவது அரசியலில் வழக்கந்தான்.

இலங்கைத் தமிழகத்தில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள்தான் தமிழரசுக் கட்சியைத் தோற்று வித்தார்கள்.

தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்த நவரத்தினம் தமிழர் சுயாட்சிக் கழகத்தை நிறுவிப்பார்த்தார்.

அண்ணா தி. மு. க. வின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

கருணாநிதியின் கழகத்தை நசுக்கிக் கொண்டு, அண்ணா தி. மு. க நிமிர்ந்து வளருமா?

காலந்தான் பதில் சொல்லவேண்டும், ஆயினும்—

இன்றுள்ள நிலையில் கருணாநிதியின் கையில் ஆட்சி இருப்பது மட்டுமல்ல. திறமைமிக்க தலைவர்கள் பலரும் கருணாநிதியோடு தான் இருக்கிறார்கள். கருணாநிதி ஒருவரின் திறமை ஒன்றே மாற்றாரை அடக்கி அழிக்கும் தொழிலுக்குப் போதுமானது!

எம். ஜி. ஆர் கட்சியில், எம். ஜி. ஆர் ஒருவரைத்தான் முக்கியமாகத் தெரிகிறது. எம். ஜி. ஆரின் செல்வாக்கு பிரமாண்டமானது. பல்லாயிரக்கணக்கான மக்கள் எம். ஜி. ஆருக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால், இந்த சாதாரண மக்கள் கூட்டத்தை திசைதிருப்பி விடுவதற்கு ஒரு திறமையுள்ள தலைவனுக்கு அதிக காலம் எடுக்காது.

தமக்கு ஆதரவாக உள்ள லட்சக்கணக்கான மக்களை, தமது கைக்குள்ளேயே வைத்துக்கொள்ள எம். ஜி. ஆரால் முடியுமானால் அவருடைய கொடி நிச்சயமாக உயரப் பறக்கும்!

எம். ஜி. ஆர். பக்கத்தில் கொள்கை இருக்கிறது; நேர்மையும் இருப்பது போல் தெரிகிறது.

ஆனால், 'அந்த'ப்பக்கத்தில் இருப்பவர் கருணாநிதியாயிற்றே!

# கேள்வி பதில்

## "சாமிஜி"

இரா. அரிராமன்,

நெறியெல்லைத்தோட்டம்

★ பிறக்கும் போது தனியாகப் பிறக்கும் மனிதன், இறக்கும் போதும் தனியாக இறக்கிறான். இடையில் எதற்கு அவனுக்குத்துணை?

இடையிலும் வேறு யாரும் அவனுக்குத் துணையாக முடியாதே! அவனுக்கு அவன்தான் உண்மையான துணை!

ராஜன்சிவா, யாழ்நகர்

★ 25 வருடங்களாகத் தமிழரசுக்கட்சி தீர்க்கமுடியாததை தாங்கள் தீர்த்து வைப்போமென்று உடுப்பிட்டிச் சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கூறுகிறார். இவரின் கூற்றை (கூத்தை) பற்றி உங்கள் கருத்தென்ன?

ஒருவர் 25 வருடங்களில் செய்யமுடியாததை இன்னொருவர் இரண்டுவருடங்களில் செய்துவிடுதல் கூடும். ஆனால், தமிழரசுக் கட்சியையும் நீங்கள் குறிப்பிடும் அமைப்பாளரையும் பொறுத்தமட்டில் இது ஒரு 'கூத்து'த்தான்.

இ. சுந்தரவடிவேல்,

அக்கரைப்பற்று-8

★ 'சமயப்பற்றுள்ள பக்தர்கள் எரியும் நெருப்பினூடே நடந்து சென்று எப்படிச் சூடுபடாமல் கரையேற முடிகிறது' என்பதற்கு விஞ்ஞானத்தினால் இன்னும் விளக்கம் கொடுக்க முடியவில்லையே?

விஞ்ஞானம் விளக்க முடியாத சில மெஞ்ஞான விஷயங்கள் இருப்பது உண்மையே. ஆனால் நீங்கள் குறிப்பிடும் நெருப்பில் நடக்கும் விஷயம் அந்த சமயப்பற்றுள்ள பக்தர்களால் மட்டுமல்ல, சில போலிகளாலும் செய்யப்படுவதை நான் அறிவேன். உண்மையான பக்தர்களுக்கு இந்த வித்தை எல்லாம் எதற்கு?


பிரஸ்டிஸ் ராஜா, பம்பரபன.

★ மயில் ஆடுவதைப் பார்த்து வான்கோழியும் ஆட நினைப்பது போல, வல்லரசுகள் விண்வெளிக்குக் கிரகங்களை அனுப்பி வெற்றி பெறுவதைக்கண்டு, இந்தியாவும் கிரகம் ஒன்றை விண்வெளிக்கு அனுப்ப முயற்சிக்கின்றதே?

உண்மைதான். ஆனால் இந்தியா ஒரு வான்கோழியல்ல. தோகை அறுக்கப்பட்டு நலிந்து போயிருந்த நல்ல ஆண்மயில்; அதன் தோகை இப்போது வளர்ந்து வருகிறது. வளரும் வேகத்தைப்பார்த்தால் மிக விரைவில் மற்ற'மயில்'களுடன் ஆட்டப்போட்டிக்கே அது வந்துவிட்டாலும் ஆச்சரியமில்லை!

சி. பரமேஸ்வரன், கொக்குவில்.

★ சிவாஜி, லட்சுமியுடன் காதல்காட்சிகளில் நடிப்பதை லட்சுமியின் கணவர் ரசிப்பாரா என்று 1-8-72 இதழில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சிவாஜி காதல் காட்சிகளில் ஓவராக நடிக்கிறார் என்ற எதிரிகளின் வசைமாரிக்குத் தூபமிடுகிறீர்



கள். இது நியாயமா? அன்றியும் சிவாஜியும் லட்சுமியும் இதுவரை காதலர்களாக நடித்ததில்லையே?

அந்தக்குறிப்பு எந்தவிதத்திலும் சிவாஜியின் நடிப்பை பற்றி விமர்ச்சிக்கவில்லை என்பதை முதலில் கவனியுங்கள். சிவாஜியும் லட்சுமியும் இதுவரை சேர்ந்து நடிக்காமலிருக்கலாம். ஆனல் அப்படி நடிக்கமாட்டார்களென்று ஏதாவது உடன்பாடு உண்டா?

இரசிகன், திருநெல்வேலிமேற்கு

★ 'நளினியின் நாயகன்' எதிர்பாராமல் நிறுத்திவிட்டதை கண்டு மிகுந்த கவலையடைகிறேன் அதன் தொடர்ச்சியை எனது கற்பனை ஏட்டில் பதித்துவிட்டேன். நீங்கள் அனுமதித்தால் அக்கதையைத் தொடர்ந்து எழுத விரும்புகிறேன்....

உங்களைப்போலவே இன்னும் இரண்டு அன்பர்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் சரியான பெயரும் முகவரியும் தந்திருந்ததால் தனிப்படப் பதில்கள் எழுதிவிட்டேன். உங்களுக்கும் அதே பதில்தான்: எழுதுங்கள். ஆனல் 'வெள்ளி'யில் அதை வெளியிடுவது பற்றி நான் இப்போது நிச்சயமாக எதுவும் கூறமாட்டேன்.

இரா., கட்டுப்பெத்தை

★ ஒரு நாட்டின் சிறுபான்மை இனம் உரிமை அற்றிருக்கிறது. அரசாங்கமோர் ஆயுதபலத்தை வைத்து உரிமையை மறுக்கின்றனர். உரிமையற்ற இனத்தின் இளைய தலைமுறையிடம் ஆத்மீக சக்தி நிறைய உள்ளது. அவ்வினத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ஆயுதபலம் தற்காலிக வெற்றியைத்தான் தரும். ஆத்மீக பலமே நிச்சயமாக நிலையான வெற்றி பெறும்!

எஸ். எஸ். இஸட்கான்,
பண்டாரவளை.

★ தங்களின் வெள்ளி 'தமிழர்'களென்று யாரைக் கருதுகிறது?

'தமிழர் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு!' என்ருர் ஒரு கவிஞர். ஆயினும் மொழியோடு தொடர்புள்ள பிரச்சினைகள் வரும்போது தமிழ் மொழியைத் தாய்மொழியாக கொண்ட அனைவருமே 'தமிழர்கள்' ஆகிவிடுகின்றனர்!

தம்பி தயாநிதி, பெல்மதுளை.

★ முந்திய அரசாங்கத்துக்கும் தற்போதைய அரசாங்கத் துக்குமிடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

'முந்திய அரசாங்கம் எது, பிந்திய அரசாங்கம் எது' என்ற வித்தியாசம் தெரியாதபடி ஒரே மாதிரியாகப் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டிருப்பது ஒற்றுமை. அரசாங்கத்தை நடத்தும் கட்சிகளின் பெயர்கள் தான் வேற்றுமை!

ஆர். கலியப்பெருமாள்,
நோவூட்

★ இலங்கைத் தமிழர்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் இனத்துவேஷத்தை ஒழித்து எல்லோரும் ஒற்றுமையாக வாழ என்ன செய்யலாம்?

இந்தப்பிரச்சினைக்குப் பலரும் பல விதமான பதில்கள் வைத்திருக்கிறார்கள். எல்லாமக்களையும் ஒரே மொழி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது; தனித்தனி அரசுகள் அமைப்பது. என்பது போன்ற வழிகளையெல்லாம் இனத்துவேஷம் வராமலிருப்பதற்காக என்றே சொல்கிறார்கள். உண்மையான இடதுசாரிகள் என்ன செர்ல்கிறார்கள் தெரியுமா? இனப்பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் பொருளாதாரம்தான். பொருளாதாரம் வளர்ந்து விட்டால் இப்படி ஒரு பிரச்சினையே இல்லாமல் போய் விடும் என்கிறார்கள் இடதுசாரிகள். இவர்கள் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கிறது!

திரை நவம், நெடுங்கேணி.

★ தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக்கோரிக்கையைப்பற்றி மௌனம் சாதிக்கும் ஆட்சியாளரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் நோக்கமென்ன?

தமிழர் கூட்டுமுன்னணியை பற்றிய பயம் எதுவும் ஆட்சியாளர்களுக்கு இல்லை. தமிழர் கூட்டணியிடம் அனுதாபமும் அவர்களுக்கு இல்லை. அவர்களின் மௌனத்தை உடைக்க வேண்டுமானால், தமிழர் கூட்டணியைப் பற்றி அவர்களுக்கு பயம் ஏற்படவேண்டும். அல்லது கூட்டணி மீது அனுதாபமாவது ஏற்பட வேண்டும். நான் இரண்டாவது வழியைச் சிபார்சு செய்தால் என்னை 'கோழை' என்று சொல்லக் கூடும், நான்மட்டுமல்ல, நாட்டின் நலன் கருதும் எவருமே இரண்டாவது வழியைத் தான் விரும்புவார்கள்!

க. நாராயணபிள்ளை,
கோவில்போரதீவு.


★ 'வெள்ளி' கண்டேன். தொடர்ந்து படிக்க விரும்புகிறேன். சந்தாவிபரத்தை அனுப்பிவையுங்கள்.

தனித்தனியாக 'வெள்ளி' பிரதிகள் அனுப்பும் செலவு, வேலை ஆகியவைகளைக் கவனிக்கையில் 'சந்தா' வழக்கத்தையே நிறுத்திவிடலாமா என்று யோசிக்கிறேன். உங்கள் பகுதியில் பத்திரிகை விற்பனையாளர் இல்லையா? அவர்மூலம் ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். அப்படியில்லாவிட்டால், ஐந்து பேர்களையாவது சேர்த்து 5 பிரதிகளுக்கு ஒரு 'ஏஜன்ட்' ஆகிவிடுங்கள்!

சா: சக்திதாசன்,
அக்கரைப்பற்று,

★ யாழ்ப்பாணத்தில் வானொலிநிலையம் ஒன்று அமைத்து அதன் நிர்வாகியாக தமிழர் கூட்டு முன்னணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்களை நியமித்தால் எப்படியிருக்கும்?

'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்பது போன்ற ஒலிபரப்புகளே தொட



ர்ந்து கேட்குமென்று நினைக்கிறீரா? தவறு. மிகவும் பொறுப்போடு நடந்து கொள்ளும் அரசியல்வாதிகளில் அமிர்தலிங்கம் ஒருவர். அவருடைய நிர்வாகத்தில் எது நடந்தாலும் அது நேர்மையாக நடக்கும்.

இ. சுந்தரவடிவேல்,
அக்கரைப்பற்று.

★ தமிழைப் பேசுகிறவன் எல்லாரும் தமிழரா அல்லது தமிழர் என்ற இனத்தில் பிறந்தவன் தமிழனா?

இதே இதழில் இன்னொரு நேயருக்குத் தந்திருக்கும் பதில் உங்களுக்கும் சரியாக அமைந்திருக்கிறது.

ராஜன் சிவா, யாழ்ப்பாணம்.

★ யாழ். மாநகரசபையின் ஆயுளை மேலும் ஒரு வருடம் தள்ளிப்போடும் தீர்மானத்தின் போது அங்கு நடந்த முரட்டுத்தனமான (பொத்தடா வாயை, மூடடா வயை) பேச்சுகளைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

ஆட்சி மன்றங்களில் இதெல்லாம் சர்வசாதாரணம். இந்த மாதிரியெல்லாம் பேசத்தெரியாதவர்கள் ஆட்சிமன்றங்களுக்குப் போக நினைப்பதில்லை!

எம். எஸ். சிவா, தெல்தோட்ட.

★ ஈழநாட்டின் நிலைமையைப் பார்க்கும் மக்கள் தமிழ்நாட்டில் போய் உயிரை விடுவதுதான் உத்தமம் என்று நினைக்கிறார்களே?

அவர்கள் இந்தியப்பிரஜைகளாக இருந்தால் சரிதான். ஈழநாட்டுப் பிரஜைகளாக இருந்தால் துரோகிகள்! அவர்கள் இந்தியாவுக்குப் போகவேண்டாம்; இடையிலுள்ள கடலிலேயே விழுந்து செத்துத் தொலைவது நல்லது!

க. சி. கணேசன்,
மாவலை எஸ்டேட்,

★ சிலைகளை ஏன் கடவுளாக மதிக்கிறோம்?

எல்லாச் சிலைகளையும் கடவுள்களாக மதிப்பதில்லையே! அநேகமான சிலைகள் அலங்காரப் பொருள்களாகத்தான் மதிக்கப்படுகின்றன. கடவுளாக மதிப்பதற்கு 'சிலை' தான் வேண்டுமென்பதில்லை. சாதாரண கல்லையும், மரத்தையும் கூட எத்தனையோ பேர் கடவுளாக மதிக்கிறார்களே!

செல்வி வடிவேல் ராஜமணி,
திருக்கோயில்.

(பரிசுக் கேள்வி)

**✶ கணவன் அன்போடு அணைக்கும் போதும், கயவனொருவன் பலாத்காரமாகத் தீண்டும் போதும் ஒரு பெண்ணின் கற்பு நிலையென்ன?**

'கற்பு' என்ற எமது கற்பனை ஒரு பெண்ணின் உள்ளத்துக்குத்தான் பொருந்துமேயொளிய உடலுக்குப் பொருந்தாதென்பதே என்னுடைய கருத்து. கணவன் அன்போடு அணைக்கும் போதும், தனது ஆசைக்குரிய இன்னொருவனை நினைத்துக் கொண்டிருக்கும் பெண்ணிடம் கற்பு இருக்கிறதா? கயவன் தீண்டும்போதும் மனத்திஞல் மாசில்லாது நின்றவளை கற்பிழந்தவள் என்று சொல்வது மனிதத் தன்மையாகுமா?


மு. கமலநாதன், செம்மலை.

✶ சூரியன் உதயமாகும்போது பெரிய உருண்டையாக காட்சியளிக்கிறது. உச்சிக்கு வந்தவுடன் சிறிதாகத்தோன்றுகிறது. பெரிதாகத் தோன்றும் போது வெப்பமும் ஒளியும் குறைவாயிருக்கிறது. அதே சூரியன் உச்சியில் சிறிதாகத் தெரியும்போது வெப்பமும் ஒளியும் அதிகமாக இருப்பது ஏன்?

இந்த நாசகார உலகத்துக்கு வருமுன்னர், பெரிதாகவும், அழகாகவும், குளிர்ச்சி உள்ளதாகவும் இருந்த சூரியன் இந்த உலகத்தின் பார்வை அதன் மீது பட்டதும் சிறுத்து குளிர்ச்சி கெட்டு, வெப்பமடையத் தொடங்கி விடுகிறது! இந்தப் பொல்லாத உலகத்தின் 'கண்'பட்ட கேடு! - வேறு வித விளக்கம் வேண்டுமானால் மூன்றும் வகுப்புப்புத்தகத்தில் நீங்கள் பார்க்கலாமே!

எஸ். சின்னராசா, கொழும்பு-14

✶ தமிழர் கூட்டுமுன்னணியின் சவாலை ஏற்று செல்வநாயகத்துடன் போட்டியிட அமைச்சர் குமாரசூரியர் முன் வருவாரா?



வரமாட்டார். தேர்தல் மூலம் அரசியலுக்கு வந்தவரல்லர் குமாரசூரியர். அதனால் போட்டியிடுவதற்கு அவரை எதிர்பார்ப்பது நியாயமல்ல.


சு. பா. சுந்தரம், திருமலை.

✶ நான் சிங்களமொழியைப் படிக்கவிரும்புகிறேன். படிக்கலாமோ?

சிங்களம் எங்கள் பக்கத்து மொழி. அதை அவசியம் தெரிந்திருக்கவேண்டும். ஆனால் சிங்களத்தைப் படிப்பதன் மூலம் தமிழ்மொழியின் அந்தஸ்தைக் கைவிட்டு விடுவீரானால், படிக்க வேண்டாம்!

மணி, யாழ்ப்பாணம்.

★ பாரதியாரின் பேத்தி யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தாரே, அவரைப்பற்றி உங்கள் கருத்து?



நான் அவரைப் பார்க்கவில்லை. இலக்கிய வட்டத்திலோ பொதுமக்கள் சபையிலோ அவர் நுழைந்ததாகத் தெரியவில்லை. பிரமுகர் வட்டாரத்திலும் சில பாடசாலைகளிலும் தலையைக் காட்டி விட்டுப்போய்விட்டார்! அவர் பாரதியல்ல; பாரதியாரின் பேத்திதான்!

'ஆரெஸ்ஸெஸ்' கொஸ்லாந்தை

★ மலையகத்திலுள்ள வடமாகாண ஆசிரியர்கள் சிலர் 'வயிற்றுவலியை நம்பினாலும் வடக்கத்தியானை நம்பாதே! என்று பேசுகிறார்களே!

அவர்களைப்பார்த்தும் அவர்களுக்குத் தெற்கே உள்ளவர்கள் அப்படிச் சொல்லலாமென்று தெரிவியுங்கள். எந்த ஒரு சமூகத்தையோ, இனத்தையோ, ஒரே வார்த்தையில் குற்றம்சொல்வது பெரியதவறு! தவறு மட்டுமல்ல; மகா முட்டாள்தனம்!

நா. சிவேந்திரன், தெஹிவளை

★ தமிழர் கூட்டணியினர் ஆறுஅம்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், தனிநாடுதான் கோரவேண்டுமென்கிறார்கள். அந்த இறுதிலட்சியத்தில் உறுதியாக இருக்கும் சுயாட்சிக் கழகத்தைத் தம்முடன் சேர்த்துக் கொள்ள முறையான அழைப்பு விடுக்காததேன்?

அந்த 'இறுதி லட்சிய'த்துக்கு இவர்கள் இன்னும் வரவில்லையே!

கலைச்செல்வி, ஏழாலை.

★ நியூமராலஜியில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

வேலையுல்லாதவர்களுக்கு அது ஒரு பொழுது போக்கு! எனக்கு நிறைய வேலை இருக்கிறதே!

★ 'நியூவேவ்' திரைப்படங்கள் என்று சில படங்களைத் தயாரிக்கின்றனரே, அவைகளைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

'நியூ' என்பதற்காக எந்த அலைகளையும் நான் தள்ளிவிட மாட்டேன். நல்ல கருத்தும் கலையம்சமும் இருந்தால் எனக்கு எதுவும் பிடிக்கும்!

ஜி. ஸ்வவரன் கொழும்பு-1.

★ நான் காதலில் தோற்று விட்டேன்...

'காதல் போயில் சாதல்' என்று பாரதி சொன்னானே, அவன் என்ன கருத்தில் சொன்னானோ, அப்படிச் செய்ய நினைப்பவர்கள் பேடிகள்! ஒரு பூவோடு காதல் செடி கருகிவிடாது தண்ணீர் ஊற்றினால் மீண்டும் மீண்டும் பூக்கும்!

■ மலேசிய விளையாட்டுத் துறையில் இலங்கைத் தமிழர்கள்பலர் முன்னணியில் இருக்கிறார்கள். மலேசிய ஹொக்கி கோஷ்டியின் தலைவர் சண்முகநாதன் ஒரு இலங்கையர். சமீபத்தில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட மலேசிய வீரர்களுக்குத் தலைமை வகித்துச் சென்ற கனகரத்தினமும் இலங்கையரே— 'இலங்கையர்' என்று குறிப்பிட்டது இலங்கை வம்சா வழியினர்களைத் தான். இவர்கள் எல்லாருமே இப்போது மலேசியப் பிரஜைகள்.

■ எமக்கு இலவசமாக கிடைக்கும் ஒரே பானம் நீர். ஆனால் இதன் பலனை அறியாது காசை அள்ளிக் கொட்டி பலனற்ற பானங்கள் பலவற்றை அருந்தி உடல்நலத்தை நாமே கெடுத்துக் கொள்கின்றோம். உடல் ஆரோக்கியத்தை சீர்படுத்தி உடல் இரத்த ஓட்டத்தை சரியான நிலையினில் வைத்து மனித வாழ்வை ஓட்டும் பானம் சுத்தமான தண்ணீரேயாகும்.

■ அரபுப் பயங்கரவாதிகளால் அரபு நாடுகளுக்கு நஷ்டமே தவிர லாபம் இருப்பதாகத் தெரியவில்லை. அரபு நாடுகள் மீது நல்லெண்ணம் கொண்ட நாடுகள் பலவும் இந்தபயங்கர வாதிகளின் செயல்களினால் தங்கள் கருத்துக்களை மாற்றிக்கொண்டு வருகின்றன. சமீபத்தில் ஒலிம்பிக்படுகொலையோடு மேற்கு ஜெர்மனியும் அரபுநாடுகளுடன் தனது தொடர்புகளைக் குறைத்துக் கொண்டுவிட்டது!

■ இலங்கையில் புத்தகம் பிரசுரத்துறையில் நல்ல நிலையில் இல்லை. என்ன காரணம்? இங்கே வியாபார முறையில்? அந்தத்துறையில் அனுபவமுள்ளவர்கள் பெரும்பாலும் புத்தகங்களை வெளியிடுவதில்லை நூலாசிரியர்கள் தங்கள் சொந்தச் செலவில் புத்தகங்களை வெளியிடுகிறார்கள். வெளியீட்டு விழா ஒன்று நடத்துவார்கள். அதில் சுமார் 150 பிரதிகள் விற்பனையாகும். தெரிந்த நண்பர்களுக்கு 100 பிரதிகள் விற்பார்கள். தெரிந்த புத்தகசாலையில் 200 பிரதிகளைக் கொடுப்பார்கள். அதில் 150 பிரதிகள் வரை திருப்பி எடுக்க வேண்டிவரும். ஆக மொத்தம் ..00 பிரதிகள் விற்பனையாகும். சற்றுக் கூடுதலாக முயற்சி எடுப்பவர்கள் 500 பிரதிகள் வரை விற்றுக் கொள்வார்கள். அச்சிட்டது 1000 பிரதிகள். மீதி 500 பிரதிகள் வீட்டிலே ஒரு பகுதியை அடைத்துக் கொண்டிருக்கும். — புத்தக வெளியீட்டுத்துறை மிக மோசமாக உள்ளது என்ற அபிப்பிராயம் ஏன்பரவலாக அடிபடாது? —இது எவ்வளவு தவறான அபிப்பிராயம் என்பதை 'வீரகேசரி' சமீபகாலத்தில் நடைமுறையில் எடுத்துக்காட்டியிருக்கிறது. இலங்கையிலும் புத்தக வெளியீட்டை வெற்றிகரமாக செய்ய முடியும் என்று எடுத்துக்காட்டிய வீரகேசரிக்கு நன்றி செலுத்த வேண்டும்!

## "சாந்தன்"

# ஒரு சின்ன வட்டம்!

**பகல்** ஒரு மணிக்குத் தொடங்கிய தமிழ்விழாக் கருத்தரங்கு முடிவடையும் போது, மணிநாலாகி விட்டது. வேல்முருகுவும் நானும் பஸ்ஸைப் பிடிக்க வந்தோம். 'ஞாயிற்றுக்கிழமை' என்ற படியால் அவ்வளவு சனமில்லை. என்றாலும், அரை மணித்தியாலத்திற்கு மேலாகியும் பஸ் வருவதாய்க் காணோம். இரைந்து விரைந்து மறைகிற வாகனங்கள், மனிதக் கும்பல்கள்— இவையே கண்ணிற் பட்டுக்கொண்டிருந்தன. வேல்முருகு, இன்னமுங் கருத்தரங்கின் கருத்துக்களிலேயே மூழ்கியிருந்தான். விபரிக்கமுடியாத சூழ்நிலையாயும், உலகம் அப்படியே உறைந்து விட்டதாயும் எனக்கு ஒரு பிரமை. மூன்று மணிநேரம் அசையாதிருந்ததால் ஏற்பட்ட சோர்வு, தூக்கம் போல் அழுத்தியது. பஸ்ஸைக் காணவில்லை.

> ''எண்டாலும், 'உவங்களுக்கு' உதவலாமா? உவங்கள் எங்களை அமத்திறவன்கள்!''
>
> ''இவனு, இந்தக் குருடனு!''
>
> ''சும்மா நக்காதை... நீ அவைக்கு உதவு... மானங் கெட்ட பயல்!''

வேல்முருகு கேட்டான், இருந்தாற்போல: ''மச்சான்; கருத்தரங்கிலே அந்தாள் சொன்னதைக் கேட்டியா? தமிழன் ஆளப்படும் வரை, அவன் உய்ய முடியாது...''

நான் தலையாட்டினேன். அப்போதுதான் அந்தக் கிழவன் வந்தான். குருட்டுப் பிச்சைக்காரன். வர்ணனையே தேவையில்லாதபடி எல்லாப் பிச்சைக்காரர்களையும் போலத்தானிருந்தான். அவனை அநுதாபத்துடன் பார்த்தான் வேல் முருகு, கையிற் குலுக்கிய தகரக்குவளையின் பின்னணியில்,

'பின்னட்ட மொக்குத்தென்ன...'' என்று ஓர் ராகம் போல், கிழவனின் குரல் சிங்களத்தில் ஆரம்பித்தது.

காற்சட்டைப்பைக்குட் கையைவிட்ட வேல்முருகு, வெறுங் கையை வெளியே இழுத்துக் கொண்டான். கிழவன், பிச்சைப் பாடல் தொடர நகர்ந்தான்.

'பஸ் எங்கே தொலைந்தது?' எனக்கு ஒரே அலுப்பு.

பின்னுற் 'படா'ரென்ற ஒரு சத்தம். திரும்பினுல், கிழவன் பாவம் கீழே விழுந்துகிடந்தான்; அவன் கையிலிருந்த வழிகாட்

டித்தடிக்கு, கீழே கிடந்த வாழைப்பழத்தோல் தெரிந்திருக்க நியாயமில்லை.

அருவருப்பை விட்டு, கிழவனைப் பிடித்து எழுப்பி அருகே கிடந்த தடியையும் எடுத்துக் கொடுத்தேன். கிழவன், நன்றி சொல்லி வாழ்த்தினுன்.

கையைத் துடைத்தபடி நிற்கும் போது, வேல்முருகு முணுமுணுத்தான்.

''உவங்களுக்கெல்லாம், உதை ஏன் செய்கிருய்?''

''பாவமடா; குருட்டுக் கிழவன்''

''எண்டாலும், 'உவங்க'ளுக்கோ?''

எனக்கு, ஏதோ உறைத்தது 'உவங்க'ளில் ஓர்அழுத்தம்.

''ஏனடா?''—எனக்கு, என்னகேட்பதென்று புரியவில்லை. அவன், முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''அவனும் மனிதன்தானே!'' நான் மீண்டுஞ் சொன்னேன்.

''எங்களை 'அமத்துற'வன்கள்!''

''இந்தக் குருடனு?''

''சும்மா, நக்காதை; அவனில்லாட்டிலும் அவன்ர ஆக்கள் தானே... நீ, அவைக்கு உதவு. மானங்கெட்டபயல்!''

''வேல்முருகு, நான் முதலிலை மனிதன்; பிறகு தமிழன்''

''நான் முதலிலை தமிழன்!'' வேல்முருகு படபடத்தான்.

''டேய், இதென்ன பேய்க் கதை?... அங்கைபார் ஒரு மாடு நிக்குது. அதுக்குப்பக்கத்திலை நீ நிண்டா, 'இது தமிழன்—இது மாடு' எண்டா சொல்லுறது? 'இது மனிதன் இது மாடு' எண்டெல்லோடா எவனுஞ் சொல்லுவான்?...''

''கருத்தரங்கிலை அவங்கட பேச்சைக் கேட்கேல்லையே? பிறகும் ?'' வேல்முருகு முறைத்தான்.

''அதுதான் அப்பனே! கருத்தரங்கிலே ஒருத்தர் சொன்னுரே! உலகநாகரீகத்திற்குத் தமிழ் நாகரீகமே வழிகாட்டியது' எண்டு, அதைத்தான், நான் இப்ப சொல்றன். 'நாங்கள் மிகவும் பண்பட்ட ஒரு இனத்தில் வந்தவர்கள்' என்று சொல்லுறமெண்டால், பிறகு இப்படியான இடங்களிலை இப்படியான பேதங்கள் பாக்கிறது, எவ்வளவு ஓர் பெரிய அவமானத்தை எங்களினத்துக்குத் தரும்? தமிழினம் அவ்வளவு தாழ்ந்த இனமா? ''

''உனக்கு எல்லாங்கிரந்தந்தான்!'' —வேல்முருகு, 'பட்'டென்று சொன்னுன். அவனை மாற்ற முடியாது!

இன உணர்ச்சி அமிர்தம் தான்; அளவுக்கு மிஞ்சிவிட்டால் அது விஷத்தை விடக்கொடிய தாக இருக்கிறதே! ●



■ அடுக்கடுக்காகச் சிகரெட்டுகளை ஊதித்தள்ளிக் கொண்டிருப்பவர் சாவகச்சேரி நவரத்தினம். அந்தவழக்கத்தையே இப்போது நிறுத்தி விட்டார் அவர். இது மிகவும் சிறிய விஷயமல்ல. சிறந்த மனஉறுதி படைத்தவர்களால்தான் இந்த மாதிரித் துறவு பூணமுடியும்!




■ இலங்கையில் சஞ்சிகைகள் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் பலவற்றுக்கு மூன்று நான்கு இதழ்கள்தான் ஆயுள். இதே சூழ் நிலையில் கடந்த பதினைன்கு ஆண்டுகளாக ஒரு சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது! 'கதம்பம்' என்ற இந்த சஞ்சிகையை கே. வி. எஸ். மோகன் என்ற இளைஞர் கடந்த பதினைன்கு ஆண்டுகளாக வெளியிட்டுவருகிறார். இப்போதும் அவர் இளைஞர்தான், 14 ஆண்டுகளுக்கு முன் தமது எத்தனையாவது வயதில் இவர் 'கதம்ப'த்தை ஆரம்பித்தாரென்று தெரியவில்லை. இவருடைய தகப்பனார் வீரகேசரி வாஸ். அவரைப்பற்றி கல்கி வானளாவப் புகழ்ந்து எழுதியது எனக்கு நினைவிருக்கிறது. இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சஞ்சிகையை நடத்திக்கொண்டிருக்கும் மோகனைப் புகழ்வதற்கும் ஒரு 'கல்கி' தான் வேண்டும்!

■ அதிக காரம், புளிப்பு, முதலியவைகளை உண்பவர்களுக்கு சாந்தமான குணம் இருக்காது. அவர்கள் அகத்தைப்போலவே முகத்தோற்றமும் கவர்ச்சியில்லாமல் இருக்கும். மாறுக, அதிக பழங்கள் உண்டு, சுத்தமான குடிநீரைப்பருகி நல்ல காற்றைச் சுவாசிக்கிறவர்கள் சிறந்த தேகாரோக்கியத்தைப் பெற்று, அதனுல் நல்ல குணங்களும்; கவர்ச்சியான தோற்றமும் பெறுவார்கள், ஒருவருடைய உணவுக்கும் அவருடைய தோற்றத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

■ எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காஉயிரோடு இருக்கும்வரை இருந்த இடமும் தெரியாமல் இருந்தவர் ஸ்ரீமாவோ. பண்டாரநாயக்காவின் மறைவுக்குப் பிறகு அவரை அரசியல் அரங்கில் ஏற்றிவைத்தவர்களில் அமைச்சர் மைத்திரிபாலாவும் ஒருவர். சமீபத்தில் மைத்திரிபாலாவின் 25 ஆண்டு அரசியல் சேவையைப் பாராட்டுமுகமாக நடந்த கூட்டத்தில் இதை மறக்காமல் நன்றி தெரிவித்திருக்கிறார் பிரதமர் ஸ்ரீமாவோ.

■ சமீபத்தில் பாலாதம்பு யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசினார். பொதுமக்களைக் கவரக்கூடியதாக எப்படிப் பேச வேண்டுமென்பதற்கு பாலாதம்வின் பேச்சு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பேசும் விஷயம் மட்டுமல்ல; குரலின் ஏற்ற இறக்கம், உடலின் அசைவுகள் முதலியனவும் ஒரு சொற்பொழிவை எவ்வளவு தூரம் கவர்ச்சிகரமாக ஆக்கிவிடுகின்றன என்பதைப் பாலாதம்பு பேசும்போது காணலாம்.

திருமதி சரோஜினி மகிஷி என்ற வட இந்திய எழுத்தாளர் எழுதிய ஒரு நூலுக்கு அரசாங்கம் பல ஆண்டுகளுக்கு முன்னுல் பரிசு அளித்துக் கௌரவித்ததோடு அந்தப்புத்தகத்தில் 1500 பிரதிகள் வாங்கிக் கொள்வதாகவும் விலை விபரம் தெரிவிக்கும்படியும் எழுதினுர்கள். ஒரு பிரதியின் விலை ரூ. 1-50 என்றும் விற்பனையாளருக்குரிய கழிவு தொகையைத் தள்ளித் தரலாமென்றும் சரோஜினி மகிஷி பதில் அனுப்பினுர். ஆனுல் அரசாங்கம் என்னகேட்டது தெரியுமா? புத்தகத்தின் பக்கங்களைக்கொண்டு அச்சுச் செலவை மதிப்பிட்டுப்பார்க்கையில் பிரதிக்கு 5 சதம் போல வரும் அந்த விலைக்குத் தருவீர்களா? என்று கேட்டார்கள். விஷயத்தின் மதிப்பைக் கவனியாமல் இப்படிக் கேட்டவர்களுக்குக் கொடுப்பதைவிட நிறுத்து வாங்கும் பழைய பேப்பர்க்காரனுக்குக் கொடுப்பது பரவாயில்லை!'' என்று அப்போது அபிப்பிராயம் சொன்னுர். சரோஜினி மகிஷி, இவர் பிறகு இந்திய அரசாங்கத்தின் சுற்றுலா அமைச்சராக வந்து விட்டார்!

சமீபத்தில் நடந்த குட்டிப் பொதுத்தேர்தல்களின் முடிவை இலங்கை வானெலி எப்படி அறிவித்தது தெரியுமா? 'ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது' என்பது முதல் வசனம். 'ஐ. தே. கட்சி நுவரெலியாவில் தனது முந்திய இடத்தை வென்றிருக்கிறது.' இது இரண்டாவது வசனம். இதைத் தொடர்ந்து 'அத்துடன் புத்தளம், கெஸ்பாவா ஆகிய இடங்களிலும் வெற்றியீட்டியிருக்கிறது' என்று மூன்ருவது வசனத்தையும் முடித்திருக்கிறது. இன்றைய ஆட்சி ஐ. தே. கட்சியின் கையிலிருந்தால் இதே வானெலி எப்படிச் சொல்லும்? ''மூன்று இடங்களில் ஐ. தே. கட்சிக்கு வெற்றி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு ஒரு இடம் மட்டும் கிடைத்திருக்கிறது'' — அநேகமாக இப்படித்தான் அந்த அறிவிப்பு நடந்திருக்கும். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அரசாங்கக் கட்சியை ஆதரிக்கும் தாபனமாகவே இயங்க முடிகிறது. பத்திரிகைகளை எல்லாம் நிறுத்தி விட்டு அரசாங்கமே ஒரு கூட்டுத்தாபனம் அமைத்து ஒரே ஒரு பத்திரிகையை மூன்று மொழிகளிலும் வெளியிட்டால் எப்படியிருக்கும்? ஒலிபரப்புத்துறையும் பத்திரிகையைப் போன்ற ஒன்றுதான். இது அரசாங்கத்தின் கையில் மட்டுமே இருக்கக்கூடாது.

'நியூவேவ்' படங்கள் சில இப்போது வட இந்தியாவில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைத்தொடர்ந்து தமிழ் நாட்டிலும் இத்தகைய படங்கள் பல உருவாகலாம் என்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் வெளியான 'அவள்' வண்ணப்படம் ஒரு 'நியூவேவ்' படம்தான். ஒரு காலத்தில் திரையுலகின் ஊழல்களை அம்பலப்படுத்திய வெண்ணிற ஆடை நிர்மலாதான் இந்தப்படத்தின் கதா நாயகி.



▮ ராஜாஜி மிகப்பிரபலமான வழக்கறிஞராக இருந்தவர் அதன் மூலம் பெருந்தொகைப் பணம் பெற்றவர். சுதந்திரப் போராட்டத்தில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிப்பதற்காக அந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுவிட்டார். அவர் தொழிலைக்கைவிட்ட சிலநாட்களின் பின், ஒருவர் தமது வழக்கை ராஜாஜியே நடத்தவேண்டுமென்று மூவாயிரம் ரூபாவைக் (அப்புக்காத்து மூவாயிரம் ரூபா) கொடுத்தார். ராஜாஜி அந்தப்பணத்தைத் தொடவேயில்லை. வழக்கைஎடுக்கவு மில்லை. இலங்கைத் தமிழ்த்தலைவர்களுக்கு இப்படித்துணிய வேண்டிய ஒரு நிலை வருமா!

▮ நோயாளிக்கு வைத்தியம் செய்யும் வைத்தியர்கள் மருந்தைமட்டும் கொடுத்தால் போதாது. நோயாளியின் மன நிலையை அறிந்து, அவர்களுக்கு நல்ல ஆறுதலும் ஆலோசனைகளும் சொல்லவேண்டும். நோயாளிகளில் அறுபது வீதமானவர்களுக்கு மருந்தைவிட, வைத்தியர் கூறும் மனத்தைரியம் தரும் வார்த்தைகளே அதிக பயன் செய்கின்றன!

▮ ராஜேஷ்கன்னு சிரிக்கும் போது அவரது, கன்னங்களில் குழி விழுகிறது. அதைப் பலரும் பாராட்டியதால் அதனையே தன் வீட்டுக்குப் பெயராகச் சூட்டியிருக்கிறுர் அவர். அவரது வீட்டின் பெயர்: 'டிம்பிள்.' 'கன்னத்தில் விழும் அதிர்ஷ்டக் குழி' என்பது அதன் அர்த்தம்.

▮ நமது நாட்டின் விவசாயத்தை விருத்தி பெறச்செய்வதற்காக ஆயிரம் ஆயிரம் குளங்களை கட்டுவித்தனர் பண்டைக்கால அரசர்கள். அந்த வாரிசுகளின் ஒருவர்தான் சி. பி, டி. சில்வா அவர்கள், ஏனோ தெரியவில்லை அவர் மறைந்ததைக் கூட இலங்கை வாழ் பொதுமக்கள் நன்கு அறிவதற்கு அரசாங்கம் எவ்விதமான விளம்பரங்களை செய்வதற்கும் முன்வரவில்லை, பத்திரிகைகளும் சுருக்கமாக கதையை முடித்துக் கொண்டன. இலங்கை நீர் வளத்திற்கு வித்திட்ட இணையற்ற தலைவனை நினைத்து பார்க்கக் கூட தவறிவிட்டது இன்றைய அரசாங்கம். சி. பி. டி. சில்வா ஒரே ஒருதவறை மாத்திரம் செய்துள்ளார். இறக்கும் தருவாயில் அரசாங்க கட்சியின் ஆதரவாளஞக இருக்க தவறியதுதான் அந்தத்தவறு இன்றைய அரசாங்கத்தின் இச்செயல் 'சாப்பிடும் வரை வாழை இலை சாப்பிட்டபின் அது எச்சி இலை' என்ற கருத்திற்கு ஒப்பாக உள்ளது!

எஸ். எம். தாஸ், திருமலை.

முன்னேறியுள்ள நாடுகளிலெல்லாம் இப்பொழுது 'திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள்' அமைக்கப்பட்டு வருகின்றன. அதாவது பல்கலைக்கழகக் கட்டிடத்துக்குச் செல்லாமல் வீட்டிலிருந்து கொண்டே, பல்கலைக்கழகப் படிப்புகளைப் படித்துப் பட்டம் பெற இத்திட்டம் உதவுகிறது. தபால், ஒலிப்பதிவு நாடா, வானொலி, டெலிவிஷன் முதலிய சாதனங்களின் மூலம், கலை, விஞ்ஞானம் ஆகிய இருதுறைகளிலும் கல்வி போதிக்கப்படுகிறது. பிரிட்டனில் கடந்த வருடம் 24000 மாணவர்கள் இந்தத்திட்டத்தில் சேர்ந்திருக்கிறார்கள். 1972ல் மேலும் 20000 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். பிரிட்டனின் இந்தத் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு, அமெரிக்கா, மெக்சிக்கோ, ஜெர்மனி, யப்பான் முதலிய நாடுகளும் இத்திட்டத்தை அமுல் நடத்தமுன் வந்திருக்கின்றன.

மலைநாட்டில் தமிழ் மாணவர்களில் நிலைமை மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. அங்குள்ள பல இடங்களில் ஒரே பாடசாலையில் தமிழ்ப்பிரிவு சிங்களப் பிரிவு என்று இரண்டு பிரிவுகளும் இருக்கின்றன. அநேகமாக சிங்களப் பிரிவே பெரிதாக இருப்பதால், சிங்கள அதிபரின் கீழேயே தமிழ்ப்பிரிவு நடைபெறுகிறது. இதனால் தமிழ்ப்பிரிவு மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடைபெறுகிறது.



மலையகத் தமிழ் மக்களிடையே அதிக செல்வாக்குள்ள தலைவர் தொண்டமான் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில், இவர், செல்வநாயகத்தையும் தமிழர் கூட்டுமுன்னணியையும் மிகவும் ஆதரித்துப் பேசியிருக்கிறார். 'செல்வநாயகம் என்றால் தமிழ்மக்கள், தமிழ் மக்கள் என்றால் செல்வநாயகம்' என்று மிகவும் புகழ்ந்த தொண்டமான், இலங்கையிலுள்ள தமிழர்கள் எல்லாரும் ஒரு தலைமையில் திரளவேண்டிய அவசியம் வந்துவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். செல்வநாயகத்தின் தலைமையில் நடப்பதற்குத் தொண்டமான் வந்து கொண்டிருக்கிறாரா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆயினும் தமிழர் கூட்டு முன்னணிக்கு மலையகத் தமிழர்களின் பெரிய ஆதரவும் இப்போது கிடைத்திருக்கிறதென்பது மட்டும் நிச்சயமாகி விட்டது!

▮ உங்கள் அருகில் உறங்குபவர் குறட்டை ஒலி எழுப்பி உங்களுக்குத் தொந்தரவு செய்தால் ஒன்று செய்யுங்கள். உங்கள் கையை, குறட்டை ஒலி எழுப்புபவரின் உடலின்மீது சிறிதுநேரம் வைத்துக் கொண்டிருந்தால் குறட்டை ஒலி நின்றுவிடும்.

▮ மெழுகுதிரி அதிக நேரம் ஒளிவிட்டு எரிய வேண்டுமா? அதை ஒரு நாள் முழுவதும் குளிர்சாதனப் பெட்டியினுள் வைத்து எடுங்கள். மற்றைய மெழுகுதிரிகளைவிட இந்தக் குளிர்சாதனப்பெட்டி மெழுகுதிரிக்கு ஆயுள் கெட்டி.

▮ தெருக்களில் குப்பை போடுகிறவர்களையும், சிகரட் துண்டை அப்படியே வீசிவிடுகிறவர்களையும், கண்டபடி காறித்துப்புகிறவர்களையும் எங்கள் நாட்டுத் தெருக்களில் சர்வசாதாரணமாகக் காணலாம், ஆனால், கோலாலம்பூரிலோ, சிங்கப்பூரிலோ இந்த மாதிரி எதையாவது செய்தால் போதும், ஆயிரக்கணக்கில் அபராதம் செலுத்த வேண்டிவரும்!

▮ சோவியத் ரஷ்யாவின் புகழ் இந் நாட்களில் வானளாவ உயர்ந்திருக்கிறது. ரஷ்யாவின் போட்டி நாடாகிய அமெரிக்கா ஒலிம்பிக்பந்தயத்தில் 33 தங்கப் பதக்கங்களை மட்டுமே பெற்றது. அதே சமயம் ரஷ்யா 50 தங்கப் பதக்கங்களை பெற்றிருக்கிறது!

▮ நிறையச் சாப்பிட்ட பிறகும், வயிறு பசிக்கும் போதும் உடற்பயிற்சிகள் செய்தல் கூடாது. தொடர்ச்சியாக, உடல் சோர்வடையும் அளவுக்குப் பயிற்சி செய்தலும் கூடாது. நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலேயே உடற்பயிற்சி செய்தல் வேண்டும்!

▮ இப்போது இலங்கையில் களவுப் பொருள்களாகிவிட்ட அநேக வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு கொழும்பு கோட்டைப் பகுதியில் ஒரு கடையை ஹோட்டல் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப் போகிறது. பலவிதமான வெளிநாட்டு நவநாகரிக பொருள்களையெல்லாம் இங்கே வாங்கலாம். சுங்கவரியும் கிடையாது! — ஆனால் நீங்கள் யாரும் இந்தக் கடைப் பக்கம் போய்ப் பிரயோசனமில்லை. வெளி நாடுகளிலிருந்துவரும் உல்லாசப் பயணிகள் மட்டுமே இந்தக் கடையிலுள்ள பொருள்களை வாங்க முடியும்.

▮ உகண்டா அதிபர் இடி அமின் முன்பு பட்டாளத்தில் ஒரு சார்ஜன்ட் ஆக இருந்தவர். உகண்டாவின் சிறந்த குத்துச் சண்டை வீரராகவும் விளங்கியவர். திடீரென்று அரசியலில் புகுந்து நாட்டின் அதிபராகவும் வந்து விட்டார்! ஆனால் இப்பொழுதும் ஒரு பட்டாளக் காரனைப் போலவே மிக மூர்க்கமாக நடந்து கொள்கிறார். உகண்டாவிலுள்ள ஆசியாக்காரர்களை அவர் வெளியேற்றிய விதத்தைக் கண்டு நாகரிக உலகம் திடுக்கிட்டிருக்கிறது. உகண்டாவுடன் பார்க்கும்போது, இங்குள்ள இந்தியர்கள் விஷயத்தில் இலங்கை மிகவும் தாராளமனப்பான்மை காட்டியிருக்கிறது!

"ஈழநாடு ஆசிரியருக்கு என்ன தலைக்கனம்!" என்று ஒரு அன்பர் எனக்கு எழுதியிருக்கிறார். ஏன் தெரியுமா? த. கூ. மு. தலைவர் செல்வநாயகம் தமது பாராளுமன்றப் பதவியை துறந்தபோது சபையில் ஒரு அறிக்கை விட்டாரல்லவா? 'அந்த அறிக்கை போதாது. இன்னும் கொஞ்சம் விபரமாக அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கலாம்' என்று 'ஈழநாடு' பத்திரிகை தலையங்கம் எழுதிற்றும். 'எங்கள் தலைவர் செல்வநாயகத்தின் அறிக்கையை இந்த யாழ்ப்பாணத்துப்பத்திரிகையே குற்றம் சொல்லலாமா?' என்பதுதான் அந்த அன்பரின் கோபம். எம். ஜி. ஆர், சிவாஜி ரசிகர்கள்தான் எழுத்தெழுத்தாக குற்றம் கண்டுபிடிக்கிறவர்களென்று நினைத்திருந்தேன். தமிழரசு அன்பர்களும் இவ்வளவு தூரம் உணர்ச்சி வசப்படுகிறார்களே! பல சந்தர்ப்பங்களில் உணர்ச்சி வேகம் அறிவுக்குத்தடை விதித்துவிடுகிறது!

'ஜெயகாந்தன்' ஒரு நல்ல கதாசிரியர். ஆனால் அவர் இப்போது தமது மனத்தில் அவ்வப்போது தோன்றும் கருத்துக்களை ஒரு பக்கம், இரண்டு பக்கம் எழுதுவதிலேயே திருப்தியடைந்து விடுகிறார். முன்பு பத்துப் பதினைந்து பக்கங்கள் எழுதியதற்கும் சிறந்த பணம் இப்போது இந்த ஒன்றிரண்டு பக்கங்களிலேயே அவருக்குக் கிடைத்து விடுகிறது. இந்தக் குறிப்புகளும் சில சமயங்களில் நன்றாகவே இருக்கின்றன. ஆனாலும் ஜெயகாந்தன் என்ற கதாசிரியர் இவைகளின் மூலம் நிலைக்க முடியாமல் போய்விடும்!



ம. பொ. சி. சமீபத்தில் கருணாநிதியை பட்டும்படாமலும் கண்டித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இக்கட்டுரை அவருடைய 'செங்கோல்' என்ற பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. ம. பொ. சி. க்கு இந்தத் துணிவு எப்படிவந்தது? விரக்தி மனப்பான்மையிலிருந்தும் வந்திருக்கலாம். ஆனால் கருணாநிதி இந்தக் கட்டுரைக்காக ம. பொ சியைக் கண்டிக்கவில்லை. பதிலாக ம. பொ. சியை அணைத்துப் பேசியிருக்கிறார். கருணாநிதிக்கு இப்போது அங்கொன்று இங்கொன்றுமாகக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக்கள் தோன்றுகின்றன. இந்தச்சமயத்தில் அவர் மா. பொ. சியை உதறிவிடமாட்டார்.

முருங்கைக் காயிலும், முருங்கை இலையிலும் நிறைய உயிர்ச் சத்துக்கள் இருப்பது பொதுவாக எல்லாருக்கும் தெரியும். முருங்கை மரத்தின் வேர், பிசின் ஆகியவைகளும் மூலிகைத் தன்மையுமுள்ளவை. இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணை நரைமயிரைக் கறுக்க வைக்கும் சக்திவாய்ந்தது!



சௌகார் ஜானகிக்கும் ஜெயலலிதாவுக்கும் ஏகப்பட்ட தகராறு. தமது மூத்த மகளின் திருமணத்துக்கு நேரில் சென்று ஜெயலலிதாவுக்கு அறிவித்தாராம் சௌகார். ஆனால் ஜெயலலிதா அந்தத் திருமணத்துக்குப் போகவில்லை. சமீபத்தில் நடந்த இளையமகளின் திருமணத்துக்கு, தமது மூத்தமகளை அனுப்பி அறிவித்தார். அதற்கும் ஜெயலலிதா, போகவில்லை. தமது புதுமனை புகுவிழாவுக்கு சௌகாருக்கு அறிவிக்க டெலிபோனைஎடுத்ததாகவும்,சௌகார் பேசமறுத்து விட்டதாகவும் குற்றம் சொல்லியிருக்கிறார். ஜெயலலிதா. ஒகோ, எனக்கு டெலிபோனிலேயே அழைப்பு விடப்பார்த்தாயா! என்று சௌகார் ஜானகி சீறிச்சினந்திருக்கிறார். சாதாரணமான இரு பெண்களின் சண்டையே ஊருக்கு வேடிக்கையாயிருக்கும். நட்சத்திரப் பெண்களின் சண்டையே வந்திருக்கிறது. ரசிகர்களுக்கு நல்ல வேட்டை!

இலங்கைச் சஞ்சிகையாளர் ஒன்றியம் சமீபத்தில் ஒரு கருத்தரங்கு நடத்திற்று. பத்திரிகை விநியோகம் பற்றிக் கருத்துத்தெரிவித்த வீரகேசரி விநியோகப்பகுதிநிர்வாகி பாலச்சந்திரன், "குறைந்தது 2000 பிரதிகளாவது விற்பனை செய்ய முடியாத சஞ்சிகைகளை ஆரம்பிக்காமலிருப்பதே நல்லது'' என்று கூறியிருக்கிறார். சஞ்சிகை ஆரம்பிக்கிறவர்கள் – ஆரம்பித்தவர்கள் அவசியம் கவனிக்கவேண்டிய கருத்து இது. சரியான திட்டமெதுவும் இல்லாமல் சஞ்சிகைகளை ஆரம்பித்து, ஆயிரம் ரூபா முதல் பத்தாயிரம் ரூபாவரை நஷ்டப்பட்டு ஒருவித பலனையும் காணாதவர்கள் இந்த நாட்டில் நூற்றுக்கணக்கில் உள்ளனர்!

ஒரு பிரபல முற்போக்கு எழுத்தாளரின் நாவலொன்று விரைவில் வெளிவரவிருக்கிறது. இந்நாவலின் வெளியீட்டு விழாவை 'முற்போக்கு'க் கோட்டைக்குள் மட்டுமே அடக்கிவிடாமல், பரந்துபட்ட முறையில், எல்லா எழுத்தாளர்களையும் சேர்த்து நடத்துவதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. சில்லையூர் செல்வராசனின் 'தணியாத தாகம்' வெளியீட்டு விழாவும் இம் முறையிலேயே நடைபெற்றது. எழுத்தாளர்களிடையே கொள்கை வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒரேயடியாகப் பிரிந்துவிடக்கூடாது. பிரிந்துவிட்டால், நல்ல ஆக்கங்கள் செய்வதைவிட, எதிரணியைத் திரட்டுவதில்தான் ஊக்கம் அதிகமாக இருக்கும்!

# நான் ஒன்று நினைக்க அவன் ஒன்று நினைக்க அவள் ஒன்று நினைத்தாள்!

* * * * * *

"மௌத்கல்யன்"

* * * * * *


'கல்பனா'வைத் தெரியுமா உங்களுக்கு? தெரியாதா? பரவாயில்லை,—ரோஜாப் பூவைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால் அவளை வர்ணிப்பதற்காக ஒரு பந்தியை வீணாக்க வேண்டியதில்லை. அவளே ஒரு ரோஜா தான். அந்த ரோஜாப்பூவை நீங்கள் மணந்து பார்த்திருப்பீர்கள். ஆனால் 'இந்த' ரோஜாப்பூவை நான் இன்னும் 'மணக்க'வில்லை.

உனக்குக் 'காதல்' பிறந்து விட்டது என்கிறீர்களா? எனக்கு அதைப்பற்றி - வார்த்தைகளில் - தெரியாது. ஆனால் அதை நான் அனுபவிக்கிறேன். அதற்காக இவ்வுணர்வுகளை 'மூன்றெழுத்'தில் அடக்க விரும்பவில்லை. அவளை நினைக்கும்போது ஒருவித மெல்லிய...... ஏன் அடுத்த பக்கத்தைப் புரட்டுகிறீர் ஐயா? இதோ விஷயத்திற்கு வருகிறேன்.

யாழ்ப்பாணத்திலே 'வடலி'க்கிராமம் ஒன்றிலே பிறந்து, வளர்ந்து, படித்துப் பின் ஒரு பெரிய பிரைவேட் கொம்பனி ஒன்றின் சிறிய கிளையொன்றிலே கொழும்பில் வேலை பார்க்கிறேன். அந்தக் கொம்பனியில்தான் இந்தக் கதையின் 'உயிர்நாடி' இருக்கிறது.

"விசாரணைகள் என்று-ஆங்கிலத்தில் - எழுதப்பட்ட பலகையின் கீழே அவள் இருப்பாள். விசாரிப்பாள். 'விசர்' பிடிக்கும் எனக்கு. நிலைக்குத்துடன் 150 அளவில் தன் தலையைச் சாய்த்து அவள் பேசும்போது; ஆ... (கம்பர் இதைப் பற்றி ஏதாவது கூறியிருக்கிறாரா ஐயா?)

இனி, கதைக்குச் சிறிது ஊறுகாய் சேர்க்கிறேன். சிறீதரன் என்று என்னைப்போல் ஒரு பிரம்மச்சாரி. அங்கே என்னுடன் வேலைபார்க்கிறான். அவன்



தியாகராஜபகவதர், பி. யூ. சின்னப்பா காலத்தில் பிரபல வில்லன் நடிகராக இருந்து. பிற்காலத்தில் மிகச்சிறந்த குணசித்திர நடிகராக விளங்கியவர் பாலையா இவருடைய மறைவு தமிழ் சினிமா உலகுக்கு ஈடு செய்யமுடியாத நஷ்டம்! தில்லானு மோகனும்பாளில் அவர் தவிலடித்த காட்சி இன்றைக்கும் கண் முன்னுல் நிற்கிறதே!

தான் இந்த ஊறுகாய். அதாவது வில்லன். வில்லன் இல்லாவிட்டால் (காரச்) சுவையேது? அந்தச் சிறீதரன் (தமிழ் 'சிறீ' ஒழிப்புப் போராட்டம் யாராவது நடத்தினுல், நான்தான் முதல் ஆளாக இருப்பேன்)

ஏனே தெரியவில்லை. கல்பனு என்னேடும், சிறீதரனேடும் ஒரே விதமாகத்தான் பழகுகிருள். ஆனுல் நாம் இருவரும் தான் அலுவலகத்திலேயே, அவளுடன் மிகவும் அந்நியோன்யமானவர்கள். இது கிழக்கோட்டான்களுக்கு மிகவும் உறுத்துகிறது. அதிலும் 'கிளாக்கர்' குலசிங்கனுர் பார்க்கிறபார்வை இருக்கிறதே, பொல்லாத் பார்வை ஐயா அது! ஒரு கண்ணிலே குரோதம் வழியும். மறுகண்ணிலே 'என்னவோ' வழியும். ஒன்று மட்டும் நிச்சயம். அவர் முகத்தில் அசடு வழிகிறது என் பதில் ஐயமேயில்லை.

இதோ! மெல்ல நடை பயின்று வந்து தனது 'சீட்' இல் இருந்து விட்டாள் கல்பனு. வரட்டுமா ஐயா? முக்கிய வேலை ஒன்று இருக்கிறது...! தெரியுமே! விடாது பின் தொடருவீர் என்று!

நான் மெல்ல என்னுடைய 'சீட்'இல் இருந்து எழும்பினேன். தலைமயிரைச்சிறிது சரி செய்து விட்டு 'லோங்ஸ்'ஐ, நீவி விட்டுப் போவதற்குள், சிறீதரன் முந்திவிட்டான். (நாசமாய்ப் போக!) ஏதோ பேசினுன். அவள் மெல்ல முறுவலித்தாள். எனக்கு நெஞ்சிலே வலித்தது. ''நேரே போய் அவளுடன் பேசுவோமா?—சே. கூடாது .....ம்''

மெதுவாகக் 'கிளாக்கர்' குலசிங்கனுரிடம் போனேன். அவருக்குச் சிறிது தள்ளி, எனது கள்ளி இருந்தாள்). ''கன்டீனு'க்குப் போவோமா'' என்று மிகவும் பரிவுடன் அவரை வினவினேன். அவர் மயங்கி விழாத குறையாக என்னைப் பார்த்தார். அதே நேரத்தில் அவளும்- தற்செயலாக-என்னைப் பார்த்தாள். நான் எனது மேல் வரிசைப் பற்கள் சீராகத் தெரியுமாறு ''ஹலோ! மோர்னிங்'' என்று சிரித்தேன். அதையே திருப்பித்தந்தாள். 'கிளாக்

கரை' அப்படியே விட்டு விட்டு, ஸ்டைலாக,—அப்படித் தான் இருக்கும்— அவளை நோக்கி நடந்தேன்.

"ஏது? இன்றைக்கு 8 மணி அடிக்க முந்தி வந்து விட்டீர்கள்'' என்று கேட்டேன்.— ஏதாவது கேட்க வேண்டும், இல்லாவிட்டால் ஊறுகாய் முந்தி விடும்.—

சிரித்தாள், கன்னங்குழிய. அவள் கன்னங்குழியச் சிரிக்கும் போது, அக்கன்னக்குழிகளை எனது விரல்களினால் தொட்டுப் பார்க்கவேண்டும் போலிருந்தது. செய்யவில்லை.

''இன்றும் அரைநாள் லீவு தானே?'' என்று இருவரையும் பார்த்துப் பொதுவாகக் கேட்டாள். நானும் சிறீதரனும், சம்பளம் எடுத்ததும் மாதமொரு முறை யாழ்ப்பாணம் போவதுண்டு. அன்று வெள்ளிக்கிழமை. ஆகவே ..

''ஓம் இன்றும் 'தேர்ட் கிளாஸ்' ஸ்லீப் ரெட்தான்(உறங்கும் இருக்கை!)'' என்று சிறீ சொல்லிச் சிரித்தான். நான் சிரிக்கவில்லை.

எனக்குப் பேச்சின் போக்குப் பிடிக்கவில்லை. நான்படிக்கும் கதைகளில் எல்லாம் எத்தனை அழகான வார்த்தைப் பிரயோகங்களில், எவ்வளவு வேகமாக...வில்லனையும் வென்று கொண்டு — காதலிக்கிறார்கள். பிறகு இன்னும் என்னென்னவோ செய்கிறார்கள்...

ஏன், எனது கனவுகளில் கூட நான் கவிஞனாக மாறிவிடுகிறேனே? ஆனால் நடைமுறையில்... சே—

இதற்கிடையில் மனேஜர் வந்து விட்டார். நான் குலசிங்கனாரின் ஃபைல் ஒன்றை உருவி எடுத்து, அதை வெகு கவனமாகப் படித்துக் கொண்டு எனது 'ஸீட்'இல் போய் இருந்தேன்.

கோட்டை ரெயில்வே ஸ்டேசன். மக்கள் வெள்ளம் அலை மோதுகிறது, வழக்கமாகக் கதைகளில் வரும் ரெயில்வே ஸ்டேசன் வர்ணனை, இங்கும் அப்படியே—சிங்களத்தில்— பொருந்துகிறது.

நானும், சிறீயும் ஆறுதலாகக் கதைத்தபடியே நின்றோம். 'ஸ்லீப்ரெட்' இல் போகும் நாங்கள் அவசரப்படத்தேவையில்லாத படியால், கருணநிதியையும், வாத்தியாரையும் பற்றி விவாதித்துக் கொண்டேயிருந்தோம்.

அப்போது—

ஒரு கையிலே சூட்கேஸும், மறுகையிலே சிறிய பார்சலும், பக்கத்திலே ஒரு பாட்டியுடனும் 'அவள்' தோன்றினாள்.

கல்பனாதான்!

எ(ன்னை)ம்மைக் கண்டவுடன் அவள் முகம் மலர்ந்தது.

''நீங்களும் 'டிரவல்' பண்ணுறியளா!'' என்று நாங்கள் —நாங்கள்தான் (நானும், ஊறுகாயும்)—ஒரே குரலில் கேட்டோம்.

''ஓம், திடீரென்று....இவவோடு போகவேண்டியதாயிற்று. ஆனால் ஒரு சின்னக் கஷ்டம்

வந்துட்டுது....'' என்று சொன்னாள்.

''நாங்கள்தான் கதாநாயகர்கள் ஆயிற்றே! விட்டுவிடுவோமா வந்த வாய்ப்பை?'' ''ஏன், என்ன விஷயம்? இல்லை .......என்ன செய்யவேண்டும் சொல்லுங்கோ'' — இத்தியாதி கேள்விகள்

''இல்லை. இவவுக்கு 'ஸ்லீப்ரெட்' டிக்கட் கிடைச்சிட்டுது. எனக்குக் கிடைக்கவில்லை. என்றாலும் பரவாயில்லை. 'மனேஜ்' பண்ணிக்கொண்டு விடுவோம்'' என்று கூறினாள் செல்லக்கிளி.

''சாய்', எனக்கு இங்கே தெரிந்த ஆள் ஒருவர் இருக்கிறார். எங்களுடைய 'ஸ்லீப்ரெட்' டிக்கட் ஒன்றைக் கான்சல் செய்து உங்களுடைய பெயருக்கு மாற்றிவிடலாம். ''டோண்ட் வொர்ரி'' என்றேன் நான்.

அவள் வேண்டாம் என்றாள். இன்னும் ஏதேதோ மறுப்புச் சொன்னாள். நாங்கள் அவளுடைய டிக்கட்டை வாங்கிக்கொண்டு, அவள் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் சென்றோம். 'எதற்காக இப்படியெல்லாம்?' என்று என்னுடைய அன்பு நிறைந்த வாசகர்களுக்கு விளக்கத் தேவையில்லை-என்று எண்ணுகிறேன்.

நேராக நானும் சிறீயும், 'விசாரணைகள்' செய்யும் இடத்திற்கு வந்தோம். எனக்குத் தெரிந்த நண்பரை - ரெயில்வேயில் வேலை செய்பவர் - கண்டு விஷயத்தை விளக்கிக் கட்டாயம் இவ்வுதவியைச் செய்து தரச் சொல்லிக் கேட்டேன். அவரும் எங்களை அழைத்துச் சென்றார்.

''சரி! கான்சல் பண்ணப் போகிற 'ஸ்லீப் ரெட்' டிக்கெட்டைத் தாங்கோ'' என்றார் நண்பர்.

நான் சிறீயின் முகத்தைப் பார்த்தேன், அவன் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பார்த்தான்—அங்கு இருந்த அவரது படத்தை!

நான் தயங்கினேன். என்னுடைய டிக்கட்டைக் கான்சல் பண்ணினால், சிறீக்குக்கல்பனாவோடு ஒன்றாகச் செல்லும் 'சான்ஸ்' கிடைக்கும். நானோ மூன்றாம் வகுப்புப் பெட்டியில் நின்றவாறு போகவேண்டி வரும்

அட நான் எப்படிப் போனால்தான் என்ன? இந்த அறுந்து போன சிறீ, அவளோடு போகப்பார்க்கிறானே பாவி. நான் தியாகம் செய்ய, பலனை அவன் அனுபவிப்பதா?

சிறீ என்னைப்பார்த்து ''உன்ரைடிக்கெட்டைக் குடு, நேரமாகிறது'' என்றான், இரக்கமில்லாமல். எனக்குக்கோபம் வந்தது. —'ராஜா' படத்தில், சிவாஜியைப் போல் சிரித்தவாறு எனது டிக்கட்டை எடுத்துக் கான்சல் செய்யக் கொடுத்து விட்டு நிமிர்ந்தேன். எனது தியாகத்தைப் பிரதமர் கவலையுடன் நோக்கிக் கொண்டிருந்தார்.

''பாவம், உங்களுக்குச் சரியான கஷ்டம்'' என்றாள் கல்பனா நன்றியுடன்.

''சீ, இதென்ன 'சிம்பிள்' வேலை'' என்று —நானல்ல— சிறீ அலட்சியமாகச் சொன்னான் எனக்கு வந்த கோபத்தில், சிறீ தரன் கத்தரிக்காயாகப் பிறக்க வில்லையே என ஏங்கினேன்.—கத் தரிக்காய்க் குழம்பு சாப்பிட எனக்கு மிகவும் பிடிக்கும்.

'இருநூற்றி ஐம்பது மைல் தூரம் இருவரும் ஒன்றாகப் பிர யாணம் செய்யப் போகிறார் களே. 'சிறீ'க்கு நல்ல சான்ஸ் அடிச்சிட்டுது. இனி எனக்குக் கல்பனா பாகற்காய்க்குழம்புதான் பா. கு. எனக்குப் பிடிக்காது. என ஏங்கியவாறு, கல்பனாவிற்கு 'டட்டா(?)' காட்டியவாறு மூன் றாம் வகுப்புப் பெட்டிகள் வந்து நிற்கும் இடத்தை நாடி ஓடி னேன்.

**வா**சகரே! ஒரு அறிவித்தல், கீழே வருகின்ற முடிவு என்னை மௌத்கல்யனைச்—சார்ந்தது அல்ல. நான் எழுதிவைத்த கதை யின் முடிவு பிடிக்காத என்னு டைய பெண்சிநேகிதி— நல்ல வாசகியும் கூட—வற்புறுத்தி எழுதச் சொன்ன முடிவாகும். அவள் நல்ல அழகி. ஆதலால் உங்களுக்கும் இந்த முடிவு பிடிக் கும் என நம்புகிறேன்.

அடுத்த திங்கட்கிழமை. அன்றைய வேலை முடிந்ததும், கல்பனா என்னிடம் வந்தாள். மீண்டும் நன்றி சொன்னாள்.

''எப்படி 'டிரவலிங்' '' என் றேன்.

'' 'கொம்ஃபட்டபிள்' நீங் கள் தான் நின்று கொண்டு கஷ் டப்பட்டிருப்பீர்கள்'' - கல்பனா.

''ம் ஹூம். அப்படியொன் றுமில்லை. சிறீ உங்களுக்கு நல்ல 'ஹெல்ப்பாக' இருந்திருப்பான் இல்லையா?'' என்றேன்.

''பிளீஸ். அதை மட்டும் கேட்காதீங்கோ. நினைக்கவே எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது'' என்றாள் மிகக் கோபத்தோடு.

''என்ன? என்ன விஷயம்?'' என்றேன், ஆவல் – வியப்பு— திகைப்பு—கோபத்தோடு.

''அதை எப்பிடிச் சொல்லு கிறது? பண்பில்லாத மனுஷன். எனக்குப் பக்கத்திலே இருந்து கொண்டு... சே. இப்படியும் ஒரு ஜென்மமா'' என்றாள். கண் கள் வெறுப்பைக் கக்கின.

''பிளடி பஸ்டர்ட்... அப்ப டியா 'பிகேவ்' பண்ணினான். நம்பமுடியவில்லையே'' என்றேன் நான், வருத்தம் சந்தோஷம் இரண்டோடும்.

''உண்மைதான். அவனோ டை டிரவல் பண்ணினத்திற்குப் பதிலாக, உங்களோடு போயிருந் தால், பிரயாணம் எவ்வளவு 'இதா' யிருந்திருக்கும்'' என் றாள் அழகி.

'' 'எதா' யிருந்திருக்கும்? '' என்றேன் ஆச்சரியத்தோடு,

''போங்கள்...'' என்று வெட்கத்தோடு.

''உண்மையாகவா கல் பனா?''

மெல்ல முறுவலித்தாள். கன்னத்தில் குழிவிழுந்தது. அதனை என் விரல்களால் தொட் டுப்பார்த்தேன் .. ●

# அன்புடன் சில வார்த்தைகள்

'ஒரு மனிதனுல் மனிதர்களுக்காக நடத்தப்படும் சஞ்சிகை என்ற வரிகள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படவேண்டியவை, நேர்மையான உங்கள் பணி ஓங்கட்டும்!

பசறை, வி. கே. மயில்வாகனம்

யாழ். நகரமண்டபத்தில் கல்கி பேசிக்கொண்டிருப்பது போலவும், மாலி வரைந்து கொண்டிருப்பது போலவும் எங்கள் மனக்கண்முன் படம்பிடித்துத் தந்திருக்கிறுர் இலக்கியச் செல்வர். அவருடைய பசுமை நினைவுகள் எங்களுக்கு மிக்க பயன் தருகின்றன.

பம்பலப்பிட்டி, சி. வயித்தீஸ்வரன்

'மகேஸ்' எழுதிய 'எக்ஸ்' கதை நன்ருகவே அமைந்தது, ஆனுலும் கொஞ்சம் அதிகமாகவே செக்ஸ்...

இணுவில், பொ. வாமதேவா

'மெத்தக் கவனம் அம்மா' ஒரு சிறந்த தலையங்கம். இதை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து எல்லா மக்களிடையேயும் பரப்ப வேண்டும். இதுபற்றி த. கூ. முன்னணிக்கும் எழுதியிருக்கிறேன்.

கொழும்பு-4, செ. கணேசன்

தோழர் வ. பொ. வுக்கு வெள்ளி வால் பிடிக்கிறதே என்று முதலில் நினைத்தேன். அவருடைய பதில்களைப்படித்த பிறகு, அவரைப்பற்றி உங்கள் கருத்துக்கள் மிகவும் சரியானவையே என்பதை உணர்கிறேன். நன்றி.

பேராதனை, எஸ். என்.

வெள்ளி வெறும் பொழுது போக்குப்பத்திரிகை என்று என்னுடைய இலக்கிய நண்பர் ஒருவர் சொன்னுர். வெள்ளியின் ஒவ்வொரு சிறு குறிப்பிலும் கூட உங்களுடைய அருமையான கருத்துக்கள் இருப்பதை நான் கவனித்துக்கொண்டு வருகிறேன். வளரும் சமுதாயத்துக்கு வெள்ளியின் சேவை மகத்தானது!

கொழும்பு-14, கே. இராமசாமி.

'கல்கண்டு' சஞ்சிகை 'போல' வெள்ளி தோன்றினுலும் 'வெள்ளி'யின் தனித்துவம் அதற்கு மதிப்பையும் சிறப்பையும் அளித்து வருகிறது.

அக்கரைப்பற்று. 'அக்கரைசக்தி'

---

அடுத்த இதழில் பசுமை நினைவுகள்

**"பண்டிதமணியின் பார்வை என்மீதுபடுகிறது!"**

இலக்கியச் செல்வர் கனக செந்திநாதன் எழுதுகிறுர்.

# ஐந்தாம் வகுப்பு

## மூன்றாந் தவணைக்குரிய பயிற்சி நூல்கள்

எழுதியவர்: திருமதி பத்மா சோமகாந்தன்

| | | |
|---|---|---|
| மாதிரி வினாப்பத்திரங்கள் | தமிழ்மொழி | சதம் 80 |
| மாதிரி வினாப்பத்திரங்கள் | சூழல் | சதம் 80 |
| மாதிரி வினாப்பத்திரங்கள் | கணிதம் | சதம் 80 |
| மாதிரி வினாப்பத்திரங்கள் | சைவசமயம் | சதம் 80 |
| மாதிரி வினாப்பத்திரங்கள் | ஆங்கிலம் | சதம் 80 |

இப்புத்தகங்கள் ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் வருவன போன்ற பல மாதிரி வினாப்பத்திரங்கள் அடங்கியுள்ளன. பாடத்திட்டம் முழுவதையும் அடக்கி இவ்வினாப்பத்திரங்கள் தொகுக்கப் பெற்றுள்ளனவாதலால், இவற்றை மாணவர்கள் செய்து பழகுவது ஒரு சிறந்த மீட்டற் பயிற்சியாகும். இவ் வினாப்பத்திரப் புத்தகத்திலேயே மாணவர் விடை எழுதக் கூடியதாக அமைக்கப் பெற்றுள்ளது.

மாணவர் பரீட்சையில் நல்ல சித்தியடைவதற்கு இப்புத்தகங்கள் மிகவும் உதவியாக அமையும்.

**வரதர் வெளியீடு**

226, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

மாணவர்களுக்கு
ஒரு நல்ல துணைவன்

வரதர்

**மாணவர் அகராதி**

(ஆங்கில - ஆங்கில - தமிழ்)

VARATHAR'S

**STUDENTS DICTIONARY**

[Eng.-Eng.-Tamil]

ரூபா 5-00

(தபாற் செலவு சதம் 60)

வரதர் வெளியீடு,
யாழ்ப்பாணம்.






அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.